www.agaram.lk

வணிகமும் கணக்கீட்டுக் கல்விக்குமான பிரிவு

# 2017 சாதாரன தரப் பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களுக்காக உதவிக் கருத்தரங்குத் தொடர்

## வணிகமும் கணக்கீட்டுக் கல்வியும்

## மாதிரி வினாப்பத்திரம்

## பகுதி II

**கவனிக்குக :**

முதலாம் வினா உட்பட **I** ஆம் பகுதியில் 2 வினாக்களுக்கும் **II** பகுதியில் 2 வினாக்களுமாக தெரிந்து மொத்தமாக 5 வினாக்களுக்கு விடை தருக.

01. கீழ்வரும் சம்பவத்தினை அடிப்படையாகக் கொண்டு இலக்கம் ( I ) தொடக்கம் ( X ) வரையான வினாக்களுக்கு விடை தருக.

சிறிதாச அரச சேவையிலிருந்து ஓய்வு பெற்றதன் பின்னர் சேதனப் பசளை உற்பத்தி செய்து விற்பனை செய்யும் வணிகமொன்றை "சிறி உரசாலை " என்ற பெயரில் ஆரம்பித்தார்.

வீட்டுக்கு சற்று தூரத்தில் இருந்த தனக்கு சொந்தமான ரூபாய் 400 000 பெறுமதியான காணியை பயன்படுத்தியதுடன் 2017 ஜுன் 01 ஆம் திகதி இநத வியாபாரத்தை ஆரம்பிக்கும் போது சிறிதாச தன்னிடமிருந்த ரூபாய் 200 000 பணத்தையும் வியாபாரத்தில் முதலீடு செய்தார். அந்தப் பணம் போதுமானதாக இல்லாததனால் 12% வருடாந்த வட்டிக்கு ரூபாய் 50 000 வங்கிக் கடனொன்றைப் பெற்றார். அத் தினமே இரு ஊழியர்கள் சேர்த்துக் கொள்ளப்பட்டதுடன் ஒரு ஊழியரின் மாதாந்த சம்பளம் ரூபா 10 000 ஆகும்.

தமது சுற்றுச் சூழலில் கிடைக்கக் கூடிய சேதனமடையும் கழிவுப் பொருட்களை மாத்திரம் உர உற்பத்திக்காக பயன்படுத்துவதுடன் போக்குவரத்து நடவடிக்கைகளை மேற்கொள்ள டிரெக்டர் வண்டி ஒன்றைக் கொள்வனவு செய்ய ரூபா 40 000 உம், கழிவுகளை அரைக்கும் இயந்திரம் ஒன்றை கொள்வனவு செய்ய ரூபா 30 000 உம் செலவிடப்பட்டது. இயந்திரத்தின் பயனுள்ள ஆயுட் காலம் 04 வருடங்கள் எனவும் ஆயுட் கால முடிவில் எஞ்சிய பெறுமதி ரூபா 6 000 எனவும் மதிப்பிடப்பட்டது.

"சிறி உரசாலை " விற்பனை நிலையத்தின் உர விற்பனை விலைகள் பின்வருமாறு

5 kg உரப் பை ஒன்று ரூபாய் 130
10 kg உரப் பை ஒன்று ரூபாய் 200
20 kg உரப் பை ஒன்று ரூபாய் 300

ஜுன் மாதத்தில் உர விற்பனை கீழ் வருமாறு காணப்பட்டது.

5 kg உரப் பைகள் 100
10 kg உரப் பைகள் 125
20 kg உரப் பைகள் 110

ஜுன் மாதத்தில் பின்வரும் செலவுகள் செய்யப்பட்டன.

| | | |
|---|---|---|
| எரிபொருள் | ரூபா | 5 000 |
| மின் கட்டணம் | ரூபா | 8 000 |
| உரம் பொதியிடும் பைகள் கொள்வனவு | ரூபா | 5 000 |
| ஊழியர் சம்பளம் | ரூபா | 20 000 |
| ஏனைய செலவுகள் | ரூபா | 2 000 |

தற்காலத்தில் இலங்கை எதிர் நோக்கியிருக்கும் கழிவுப் பொருள் முகாமைத்துவப் பிரச்சினை மற்றும் சேதனப் பசளைகளுக்கு இருக்கும் அதிக கேள்வி என்பவற்றினால் சிறிதாச தனது நண்பனான குணசிறி வணிகத்தில் இணைத்துக் கொண்டு வரையறுத்த பொறுப்புடன் மேலும் விஸ்தரிக்க எதிர் பார்க்கிறார்.

(i) (அ) "சிறி உரசாலை " வணிகம் உரிமை அடிப்படையில் வகைப்படுத்தும் போது எந்த நிறுவன வகையைச் சாரும்?

(ஆ) "சிறி உரசாலை " வணிகம் நோக்கத்தின் அடிப்படையில் வகைப்படுத்தும் போது எந்த நிறுவன வகையைச் சாரும்?

(ii) (அ) "சிறி உரசாலை " வணிகத்தின் பெயர் பதிவுக்கு உரித்தான சட்டத்தைக் குறிப்பிடுக?



Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk
agaram.lk

(ஆ) வணிகமொன்றின் பெயரை பதிவு செய்வதனால் கிடைக்கும் அனுகூலங்கள் 2 தருக.

(iii) "சிறி உரசாலை " வணிகத்தினால் சிறிதாசவுக்குக் கிடைக்கும் 2 அனுகூலங்களையும் 2 பிரதிகூலங்களையும் எழுதிக் காட்டுக.

(iv) (அ) "சிறி உரசாலை " வணிகத்திற்கு உள்ள வாய்ப்பு ஒன்றைக் குறிப்பிடுக?

(ஆ) குணசிறியினை பங்காளராக சேர்த்துக் கொண்டதன் பின் ஆரம்பிக்கக் கூடிய நிறுவன வகையை குறிப்பிட்டு அதற்கான சட்டத்தையும் குறிப்பிக.

(v) 2017 ஜூன் 01 ஆந் திகதிக்கு இவ் வணிகத்தின் கணக்கீட்டுச் சமன்பாட்டை தொகைகளுடன் தருக.

(vi) 2017 ஜூன் மாதத்தின் விற்பனை வருமானம் எவ்வளவு?

(vii) 2017 ஜூன் 30 ஆந் திகதிக்கு சிறிதாசவின் வணிகத்தின் காசு மீதியை கணிப்பிட்டுக் காட்டுக.

(viii) 2017 ஜூன் 30 ஆந் திகதிக்கு இயந்திரப் பெறுமானத் தேய்வைப் பதிவதற்கான இரட்டைப் பதிவுகளை தொகைகளுடன் குறிப்பிடுக.

(ix) 2017 ஜூன் மாதத்தின் இலாபம் எவ்வளவு?

(x) (அ) 2017 ஜூன் 30 ஆந் திகதியில் இவ் வணிகத்தின் உரிமையின் பெறுமதியை கணிப்பிட்டுக் காட்டுக.

(ஆ) 2017 ஜூன் 30 ஆந் திகதிக்கு இவ் வணிகத்தின் நடைமுறையல்லாப் பெறுப்புக்களின் பெறுமதியை கணிப்பிட்டுக் காட்டுக.

(புள்ளிகள் 2 x 10 = 20)

## பகுதி I

02. (i) (அ) வணிகம் என்றால் என்ன

(ஆ) மனிதத் தேவைகளுக்கும் வணிகத்துக்குமிடையிலான தொடர்பை விளக்கு (புள்ளிகள் 2)

(ii) கீழ்வரும் கூற்றுக்கள் உண்மையானதா அல்லது பொய்யானதா எனக் கூறுக.

(அ) ஆடை உற்பத்தி, பொருள் உற்பத்தி வணிகமொன்றுக்கான உதாரணமாகும்.

(ஆ) இயற்கையிலிருந்து கிடைக்கும் அனைத்து வளங்களும் நிலம் என்பதற்குள் அடங்கும்.

(இ) வணிகத்தில் சேவை செய்யும் சுத்திகரிப்புத் தொழிலாளர்கள் இவ் வணிகத்திற்கு உள ரீதியான பங்களிப்பைச் செய்கின்றனர்.

(ஈ) உற்பத்தியில் ஆதாரமாகக் கொள்ளும் மனிதனால் உற்பத்தி செய்யப்பட்ட அனைத்தும் மூலதனம் எனப்படும். (புள்ளிகள் 2)

(iii) விவசாயத் திணைக்களத்தின் கீழ் நடாத்தப்படும் அலங்கார மலர் பயிர்ச் செய்கை பற்றிய பயிற்சி நெறி ஒன்றில் பங்கு பற்றிய ரெறாஸா அலங்கார மலர் பயிர் செய்து விற்பனை செய்யும் வணிகம் ஒன்றை ஆரம்பித்தார்.

(அ) ரெறாஸாவின் வணிகத்தின் நோக்கங்கள் இரண்டை கூறுக.

(ஆ) இவ் வணிகத்தில் அக்கறை கொள்ளக் கூடிய ஒரு தரப்பினரைக் குறிப்பிட்டு அவர்களால் வணிகம் எதிர்பார்க்கும் பங்களிப்புகள் இரண்டு தருக. (புள்ளிகள் 2)

(iv) வசந்த என்பவர் அரச அலுவலக தொகுதிகள் பல உள்ளடங்கிய கட்டடம் ஒன்றுக்கு அருகில் இரசாயணம், நஞ்சு அற்ற தேசிய உணவு வகைகளை தயாரிக்கும் சிற்றுண்டிச்சாலை ஒன்றை நடாத்துகிறார். அன்றாடம் பெருந்தொகையான வாடிக்கையாளர்கள் சிற்றுண்டிச்சாலைக்கு வருகை தருகின்றனர்.

(அ) இந்த வணிகத்தின் வாய்ப்பொன்றைக் குறிப்பிடுக.

(ஆ) எதிர் காலத்தில் இவ் வணிகத்துக்கு ஏற்படக் கூடிய சவாலொன்றைக் குறிப்பிடுக.

( புள்ளிகள் 2)

(மொத்தம் 08 புள்ளிகள்)

03. (i) நிஹால் தம் வணிகத்துக்கு ரூபா 25 000 க்கு பொருட்களை குணவர்தன என்பவரிடம் வாங்கி அதில் ரூபா 5 000 பணமாக செலுத்தி மிகுதியை இலங்கை வங்கியில் இருக்கும் தனது நடைமுறைக் கணக்கின் காசோலையூடாக கொடுப்பனவு செய்தார்.

(அ)மேலே குறிப்பட்ட காசோலைக்கு உரிய கட்டளையை இடுபவர், கட்டளையைப் பெறுபவர், காசோலைக்குப் பணம் பெறுபவர் என்பவற்றைப் பெயரிடுக.

(ஆ)மேற் குறிப்பிட்ட காசோலையின் பெறுமதி எவ்வளவு? (புள்ளிகள் 2 )

(ii) கீழ்வரும் கூற்றுக்கள் உண்மையானதா அல்லது பொய்யானதா எனக் கூறுக.



Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

www.agaram.lk



(அ) உலகமயமயமாக்கல் என்பது நாடுகளுக்கிடையில் பொருளாதார, சமூக மற்றும் கலாசார ரீதியான காணப்படும் இணைப்பாகும்.
(ஆ) வணிக அமைப்புக்களை நோக்கத்தின் அடிப்படையில் வகைப்படுத்தும் போது தனியார் மற்றும் அரச துறைகள் என்று வகைப்படுத்தப்படும்.
(இ) இழப்பீட்டுத் தத்துவம் ஆயுளுறுதி தொடர்பாக தாக்கம் செலுத்தும்.
(ஈ) தொடர்பாடல் செயன் முறையில் உள்ளடங்கும் ஒரு கூறு தெளிவு என்பதாகும்.
(புள்ளிகள் 2)

(iii) வீமலன் தனது நண்பன் ஒருவருடன் சேர்ந்து மூலதனமிட்டு சுற்றுக் கிராமங்களின் விவசாயிகள் வளர்க்கும் எருமை மாடுகளின் பாலை சேகரித்து தயிர் தயாரிக்கும் வணிகமொன்றை ஆரம்பிக்கிறார்.
(அ) மேற் குறிப்பிட்ட வணிகம் எவ்வகையான வணிக அமைப்பு வகையைச் சேர்ந்து எனக் கூறுக.
(ஆ) மேற் குறிப்பிட்ட வணிகத்தில் தாக்கம் செலுத்தும் சட்டம் ஒன்றைக் குறிப்பிடுக.
(புள்ளிகள் 2)

(iv) விஸலின் போக்குவரத்து சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ள சகல வாகனங்களும் ரூபா 2 000 000 பெறுமதியான பூரண காப்புறுதி ஒப்பந்தத்தில் உள்ளடங்குபவை ஆகும். மேலும் பயணிகளின் பொருட்களுக்கு ரூபா 100 000 காப்புறுதி ஒப்பந்தம் பெறப்பட்டுள்ளது. திடீரென இடம் பெற்ற விபத்து ஒன்றில வாகனத்துக்கு ரூபா 300 000 உம் பொருட்களுக்கு ரூபா 15 000 உம் சேதம ஏற்பட்டுள்ளதாக காப்புறுதி நிறுவன மதிப்பீட்டாளரால் காப்புறுதி நிறுவனத்துக்கு குறுந் தகவல் மூலம் அறிவிக்கப்பட்டது.
(அ) விஸலுக்குக் கிடைக்கும் காப்புறுதி நட்டஈட்டுத் தொகை எவ்வளவு?
(ஆ)இதில் தாக்கம் செலுத்தும் காப்புறுதித் தத்துவம் எது? (புள்ளிகள் 2)
(மொத்தம் 08 புள்ளிகள்)

04. (i) (அ) முதலீடு என்றால் என்ன என்பதை சுருக்கமாக விளக்குக.
(ஆ) கொழும்புப் பங்குச் சந்தையின் செயற்பாடுகளை மேற்பார்வை செய்யவும் ஒழுங்கு படுத்தலுக்காகவும் உருவாக்கப்பட்ட நிறுவனம் எது? (புள்ளிகள் 2)

(ii) கீழ்வரும் கூற்றுக்கள் உண்மையானதா அல்லது பொய்யானதா எனக் கூறுக.
(அ) பங்குதாரர் ஒருவர் நிறுவனம் ஒன்றின் பங்குகளை கொள்வனவு செய்வதனால் கிடைக்கும் அனுகூலம் பங்கிலாபமாகும்.
(ஆ) திறைசேறி உண்டியல்களை கொள்வனவு செய்த ஒருவருக்கு அவற்றை எந்த நேரத்திலும் பணமாக மாற்றிக் கொள்ள முடியும்.
(இ) வணிகமொன்றின் நோக்கத்தை எதிர்பார்த்தவாறு அடைந்து கொள்வது வினைத்திறன் எனப்படும்.
(ஈ) முகாமைத்துவ செயன்முறையில் பிரதான முகாமைத்துவ கருமங்கள் 5 உண்டு. (புள்ளிகள் 2)

(iii) ஆடை உற்பத்தி நிறுவனமொன்றின் செயன்முறைகளில் சில கீழே காட்டப்பட்டவாறு தரப்படுகின்றன
(அ) ஆடைகள் தைப்பதற்குத் தேவையான மூலப் பொருட்களை ஊழியர்கள் தீர்மானித்தல்.
(ஆ)ஒவ்வொரு ஆடை தைக்கும் பிரிவிற்கும் முகாமையாளர்களை நியமித்தல்.
(இ) உற்பத்தி முகாமையாளர்கள் தம் ஊழியர்களுக்கு தேவையான ஆலோசனைகளை வழங்கல்.
(ஈ) உற்பத்தி செய்யப்பட்ட ஆடைகளின் குறைகளை நிவர்த்திக்க நடவடிக்கை எடுத்தல்.
முகமைத்துவ செயன்முறையை ஒழுங்கு முறைப்படி காட்டுக. (புள்ளிகள் 2 )

(iv) அங்கிகரிக்கப்பட்ட ஆடை உற்பத்தியாளர் ஒருவர் சேர்ட்களை உற்பத்தி செய்து விற்பனை செய்ய நடவடிக்கை எடுத்திருப்பதுடன் ஒரு சேர்ட் ரூபா 850/= க்கு விற்பனை செய்ய தீர்மானிக்கிறார். நகரத்தின் ஆடையகங்களில் இந்த சேர்ட்கள் விற்பனை செய்யப்படுவதுடன் இரண்டு சேர்ட்டுகள் கொள்வனவின் போது 10% கழிவு வழங்கப்படுகிறது.
மேற் குறிப்பிடப்பட்ட சம்பவத்துக்கு அமைவாக சந்தைப்படுத்தல் கலவை மாறிகளைக் குறிப்பிட்டு அவற்றுக்கு உதாரணம் தருக. (புள்ளிகள் 2)
(மொத்தம் 08 புள்ளிகள்)



Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

## பகுதி II

05. (i) (அ) கணக்கீட்டின் நோக்கங்கள் இரண்டை குறிப்பிடுக.

(ஆ) சாந்தனியின் வணித்தில் 2015.12.31 ஆந் திகதியில் உரிமை ரூபா 150 000 ஆக காணப்பட்டதுடன் 2016.01.31 ஆந் திகதிக்கு உரிமை குறைவாகக் காட்டப்பட்டுள்ளது. அவரின் உரிமை குறைவடைவதற்கான காரணங்கள் இரண்டு தருக.

( புள்ளிகள் 2 )

(ii) கீழ் காட்டப்படுவது விதாறா வணிகத்தின் 2017 ஜனவரி மாதத்தில் இடம் பெற்ற கொடுக்கல் வாங்கல்களாகும்.

(1) ஜனவரி 01 இல் ரூபாய் 50 000 ஐ மேலதிக மூலதனமாக காசாக இடப்பட்டது.
(2) ஜனவரி 06 இல் ரூபாய் 10 000 க்கு கொள்வனவு செய்த பொருட்கள் ரூபா 15 000 க்கு விற்பனை
(3) ஜனவரி 12 இல் ரூபாய் 4 000 ஆன மின் கட்டணம் காசாக செலுத்தப்பட்டது.
(4) ஜனவரி 20 இல் ரூபாய் 1 000 வட்டியுடன் ரூபா 6 000 க்கு வங்கிக் கடன் தவணை செலுத்தப்பட்டது.
(5) ஜனவரி 25 இல் ரூபாய் 20 000 ஆன காரியாலய உபகரணங்களை கடனுக்கு கொள்வனவு செய்யப்பட்டது.

கீழ்வரும் அட்டவணையை பயன்படுத்தி மேலுள்ள கொடுத்தல் வாங்கல்களை கணக்கீட்டு சமன்பாட்டில் ஏற்படுத்தும் தாக்கத்தை குறித்துக் காட்டுக.

| கொடுக்கல் வாங்கல் இலக்கம் | சொத்து | | = | உரிமை + பொறுப்புக்கள் | | |
|---|---|---|---|---|---|---|
| | நடைமுறை யல்லாச் சொத்துக்கள் ( ரூபாய் ) | + இருப்பு ( ரூபாய் ) | + காசு ( ரூபாய் ) | உரிமை ( ரூபாய் ) | + வங்கிக் கடன் ( ரூபாய் ) | + கடன் பட்டோர் ( ரூபாய் ) |
| | 120 000 | 30 000 | 50 000 | 140 000 | 45 000 | 15 000 |
| 1 | | | + 50 000 | + 50 000 | | |
| 2 | | | | | | |
| 3 | | | | | | |
| 4 | | | | | | |
| 5 | | | | | | |

(புள்ளிகள் 2)

(iii) திலன தம்சத்தின் வணிகத்தில் 2017 பெப்ரவரி மாதத்தில் இடம் பெற்ற கொடுக்கல் வாங்கல்களுக்கு அமைவாக காசுக் கணக்கு பின்வருமாறு

| திகதி | ப. இ ல | விபரம் | பே ப. ப | கழி வு | தொகை (ரூபாய்) | திகதி | க. இ ல | விபரம் | பே. ப | கழி வு | தொகை (ரூபாய்) |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 2017.02.01 | | மீ. கீ. கொ. வந்தது | | | 50 000 | 2017.02.02 | | காசுக்கு கொள்வனவு | | | 10 000 |
| 2017.02.02 | | துஸற (கடன்பட்டோர்) | | 200 | 6 800 | 2017.02.08 | | சமந்த (கடன்கொடுத்தோர்) | | 300 | 9 700 |
| 2017.02.16 | | விற்பனை | | | 12 000 | 2017.02.14 | | மின் கட்டணம் | | | 2 000 |
| 2017.02.20 | | சுசில் (கடன்பட்டோர்) | | 300 | 12 700 | 2017.02.21 | | லெஹன்ஸா(கடன்கொடுத் | | 100 | 4 900 |
| | | | | | | 2017.02.28 | | தோர்) | | | 54 900 |
| | | | | 500 | 81 500 | | | மீ. கீ. கொ. சென்றது | | 400 | 81 500 |

மேலதிகத் தகவல்கள் வருமாறு

01. 2017. 02. 01 ஆந் திகதியில் மீதிகள்
காசு ரூபா 50 000
கடன் பட்டோர் ரூபா 35 000
கடன் கொடுத்தோர் ரூபா 25 000

02. மாதத்துக்குள் நிகழ்ந்த கடன் விற்பனை
துஸறவுக்கு ரூபா 14 000
பியலுக்கு ரூபா 6 000

03. மாதத்துக்குள் நிகழ்ந்த கடன் கொள்வனவு
லெஹன்ஸாவிடம் ரூபா 9 000
வஜிறவிடம் ரூபா 7 000

Agaram.LK - Keep your dreams alive!

Agaram.LK - Keep your dreams alive!



agaram.lk

www.agaram.lk



தேவைப்படுவது – 2017 பெப்ரவரி மாதத்துக்கான

i. கடன் பட்டோர் கணக்கு
ii. கடன் கொடுத்தோர் கணக்கு
iii. கொடுத்த கழிவுக் கணக்கு
iv. பெற்ற கழிவுக் கணக்கு (புள்ளிகள் 4)

(iv) 2017 ஜூன் மாதத்திற்கான வங்சபாலவின் வணிகத்தின் புத்தகங்களிலிருந்து கீழ்வரும் தகவல்கள் பிரித்தெடுக்கப்பட்டன.

| | | | |
|---|---|---|---|
| 2017. 06. 01 ஆந் திக்கதிகு மூலதனம் | | ரூபா | 180 000 |
| மாதத்தின் மொத்த வருமானம் | | ரூபா | 60 000 |
| மாதத்தின் பற்றுக்கள் - | காசு | ரூபா | 4 000 |
| | பொருள் | ரூபா | 5 000 |
| மாதத்தின் செலவுகள் - | விற்பனைக் கிரயம் | ரூபா | 40 000 |
| | வேறு செலவுகள் | ரூபா | 8 000 |
| 2017. 06. 15 ஆந் திகதி மேலதிக மூலதனமிடல் | | ரூபா | 10 000 |

வேண்டப்படுவது

2017. 06. 30 ஆந் திகதிக்கான உரிமையைக் கணிப்பீடு செய்க. (புள்ளிகள் 4)

06. (i) (அ) கட்டடம், இருப்பு, கடன்பட்டோர் மற்றும் காசு என்பன வணிகமொன்றின் சொத்துக்களாகும். சொத்தொன்றின் இயல்புகளை பெயரிடுக.

(ஆ) சிறு செலவுக் காசு வசக்கட்டு என்னறால் என்ன? (புள்ளிகள் 2)

(ii) கிம்ஹான பல்வேறு காரியாலய தேவைகளின் நிமிர்த்தம் பயன்படுத்தக் கூடிய சுற்றும் நாற்காலிகளை உற்பத்தி செய்வதோடு அதற்கான செலவுகள் பின்வருமாறு

| | | |
|---|---|---|
| குசன் புடவைக்கான செலவு | ரூபா | 40 000 |
| சக்கரங்களுக்கான செலவு | ரூபா | 8 000 |
| நிறப் பூச்சுச் செலவு | ரூபா | 12 000 |
| உற்பத்தி தொழிலாளர் கூலி | ரூபா | 20 000 |
| உற்பத்தி மேற்பார்வை கூலி | ரூபா | 6 000 |
| கதிரைகளை சுற்ற வைப்பதற்கான ஆணிகள் கொள்வனவு | ரூபா | 10 000 |
| உற்பத்தி செய்யப்பட்ட கதிரைகள் | | 100 |

வேண்டப்படுவது

(அ). மேற் காட்டப்பட்ட செலவுகளை நேர் மற்றும் நேரில் என வகைப்படுத்துக.

(ஆ). உற்பத்தி செய்யப்பட்ட கதிரையொன்றின் கிரயத்தைக் கணிக்குக. (புள்ளிகள் 2)

(iii) சிறிமெவனின் வணிகத்தில் 2017 ஜூன் மாதத்திற்கான வங்கிக் கணக்கும் அம் மாதத்திற்காக வங்கியால் அனுப்பப்பட்ட வங்கிக் கூற்றும் கீழே தரப்பட்டுள்ளன.

வங்கிக் கணக்கு

| திகதி | விபரம் | | தொகை (ரூபாய்) | திகதி | விபரம் | | தொகை (ரூபாய்) |
|---|---|---|---|---|---|---|---|
| 2017. 03. 01 | மீ. கீ. கொ. வந்தது | | 25 000 | 2017. 03. 03 | தளபடம் | 066060 | 4 000 |
| 2017. 03. 04 | மலீக் | 10668 | 6 000 | 2017. 03. 08 | மின் கட்டணம் | 066061 | 5 000 |
| 2017. 03. 09 | அமான் | 20250 | 8 000 | 2017. 03. 10 | அஜிதா | 066062 | 3 000 |
| 2017. 03. 12 | விற்பனை | 30100 | 12 000 | 2017. 03. 14 | சமன் பாலித | 066063 | 4 500 |
| 2017. 03. 15 | விஜேதிலக | 11600 | 5 000 | 2017. 03. 20 | காப்புறுதிக கட்டணம் | 066064 | 2 000 |
| 2017. 03. 25 | காசு | | 10 000 | 2017. 03. 26 | வீட்டு வாடகை | 066065 | 6 000 |
| | | | | 2017. 03. 31 | மீ. கீ. கொ. சென்றது | | 41 500 |
| | | | 66 000 | | | | 66 000 |
| 2017. 04. 01 | மீ. கீ. கொ. வந்தது | | 41 500 | | | | |



Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

www.agaram.lk



வங்கிக் கூற்று

| திகதி | விபரம் | வரவு ( ரூபா ) | செலவு ( ரூபா ) | மீதி ( ரூபா ) |
|---|---|---|---|---|
| 2017. 03. 01 | மீ. கீ. கொ. வந்தது | | | 25 000 |
| 2017. 03. 06 | காசோலை 10668 | | 6 000 | 31 000 |
| 2017. 03. 07 | காசோலை 066060 | 4 00 | | 27 000 |
| 2017. 03. 10 | காப்புறுதிக் கட்டணம் நிலையான கட்டளை | 2 00 | | 25 000 |
| 2017. 03. 11 | காசோலை 066061 | 5 00 | | 20 000 |
| 2017. 03. 13 | நவசிவாயம் | | 10 000 | 30 000 |
| 2017. 03. 16 | காசோலை 30100 | | 12 000 | 42 000 |
| 2017. 03. 17 | காசோலை 066063 | 4 500 | | 37 500 |
| 2017. 03. 18 | வங்கிக் கட்டணம் | 1 000 | | 36 500 |
| 2017. 03. 20 | முதலீட்டு இலாபம் | | 5 500 | 42 000 |
| 2017. 03. 21 | காசோலை 066064 | 2 000 | | 40 000 |
| 2017. 03. 25 | காசு | | 10 000 | 50 000 |

வேண்டப்படுவது

(அ). வங்கிக் கணக்கை திருத்தியமைத்தல்

(ஆ). வங்கிக் கணக்கிணக்கக் கூற்றுறை தயாரித்தல். (புள்ளிகள் 4)

(iv) மாயாதுன்னையின் வணிகத்தின் 2017. 12. 31 ஆந் திகதிக்கு தயாரிக்கப்பட்ட பரீட்சை மீதியில் வரவுப் பக்கம் ரூபா 700 குறைவைக் காட்டியதால் வணிகத்தின் கணக்குப் பதிவாளர் கணக்குகளை பரிசீலிக்கும் போது கீழ்வரும் வழுக்கள் வெளிப்பட்டன.

- தொலைபேசிக் கட்டணமாக செலுத்தப்பட்ட ரூபா 2000 இரு முறை புத்தகங்களில் பதியப்பட்டிருந்து.
- பண்டாரவிடமிருந்து கிடைத்த ரூபா 7 500 பணம் பண்டாரவின் கணக்கில் ரூபா 5 700 என பதியப்பட்டிருந்து.
- ரூபா 2 500 க்கான கடன் விற்பனையானது கடன் பட்டோர் கணக்கில் பதியப்படாமை.

வேண்டப்படுவது

(அ) வழுக்களைத் திருத்துவதற்கான நாட்குறிப்புப் பதிவுகள்

(ஆ) தொங்கல் கணக்கு (புள்ளிகள் 4)

07. (i) (அ) தேறிய இலாபத்தை மூலதனக் கணக்கிற்கு மாற்றும் நாட்குறிப்புப் பதிவை தருக.

(ஆ) இலாப நட்டக் கூற்றைத் தயாரிக்கும் போது கருத்தில் எடுக்கப்படும் எண்ணக்கருக்கள் இரண்டு தருக. (புள்ளிகள் 2)

(ii) றெயின்போ விளையாட்டுக் கழகத்தின் 2016 ஆம் ஆண்டுக்கான வருமானக்கூற்று கீழே தரப்படுகின்றது.

| | ரூபா | ரூபா |
|---|---|---|
| வருமானம் | | |
| அங்கத்துவப் பணம் | 60 000 | |
| நன் கொடைகள் | 20 000 | |
| போட்டி வருமானம் | 30 000 | 110 000 |
| கழி – செலவுகள் | | |
| கட்டட வாடகை | 12 000 | |
| மட்டைகளும் பந்துகளும் | 15 000 | |
| தளபாடத் தேய்வு | 5 000 | |
| போட்டிச் செலவுகள் | 18 000 | |
| ஏனைய பொது செலவுகள் | 10 000 | ( 60 000 ) |
| மேலதிகம் | | 50 000 |

குறிப்புக்கள்

- காலப் பிரிவுக்குள் கிடைக்க வேண்டியஅ ங்கத்துவப் பணம் ரூபா 15 000 ஆகும்.
- கொடுக்க வேண்டிய கட்டட வாடகை ரூபா 6 000 ஆகும்.

வேண்டப்படுவது



Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

www.agaram.lk



1. 2016 ஆம் ஆண்டுக்கான றெயின்போ விளையாட்டுக் கழகத்தின் கொள்ளல் கொடுத்தல் கணக்கை தயார் செய்க. (புள்ளிகள் 2)

(iii) றுக்மல் வணிகத்தின் 2016. 12. 31 ஆந் திகதி தயாரிக்கப்பட்ட பரீட்சை மீதி பின்வருமாறு

| விபரங்கள் | வரவு ( ரூபா ) | செலவு ( ரூபா ) |
|---|---|---|
| செலுத்த வேண்டிய வட்டி | 4 000 | |
| கடன் பட்டோர் | 350 000 | |
| விற்பனை | | 870 000 |
| 2016. 01. 01. அல் இறுப்பு | 40 000 | |
| காணி | 700 000 | |
| கட்டடம் ( கிரயத்தில் ) | 800 000 | |
| காரியாலய உபகரணங்கள் ( கிரயத்தில் ) | 200 000 | |
| ஊழியர் சம்பளம் | 80 000 | |
| கிடைத்த கழிவு | | 12 000 |
| 10% வங்கிக் கடன் | | 300 000 |
| கட்டட வடகை | 176 000 | |
| மூலதனம் | | 900 000 |
| கொள்வனவு | 410 000 | |
| கடன் கொடுத்தோர் | | 470 000 |
| காசு | 22 000 | |
| ஏனைய அலுவலக செலவுகள் | 120 000 | |
| உள் வந்த வண்டிக் கூலி | 40 000 | |
| காப்புறுதி | 30 000 | |
| கொடுத்த கழிவு | 10 000 | |
| வங்கி மேலதிகப் பற்று | | 238 000 |
| மின்சாரம் | 18 000 | |
| கிடைத்த கூலி | | 130 000 |
| 2016. 01. 01. கட்டட பெறுமானத் தேய்வு ஒதுக்கம் | | 80 000 |
| | 3 000 000 | 3 000 000 |

மேலதிகத் தகவல்கள்

01. 2016.12.31. ஆந் திகதி இறுதி இறுப்பின் பெறுமதி ரூபா 120 000 ஆகும்.

02. காரியாலய உபகரணங்கள் மற்றும் கட்டடங்கள் முறையே 10% மற்றும் 5% பெறுமானத் தேய்வு இடுக.

03. 2016.12.31. ஆந் திகதிக்கு கிடைக்க வேண்டிய கட்டட வாடகை ரூபா 20 000 ஆக இருந்ததுடன் அன்றைய தினம் அட்டுறு போக்குவரத்துக் கட்டணம் ரூபா 10 000 ஆகும்.

04. ரூபா 5 000 அறவிட முடியாக் கடனாக கழிக்கப்பட்டது.

05. வங்கிக் கடன் பெறப்பட்டது 2016. 12.0 30 ஆந் திகதி ஆகும்.

வேண்டப்படுவது

1. 2016. 12. 31 இல் முடிவடைந்த ஆண்டுக்குறிய இலாப நட்டக் கூற்று
2. 2016. 12. 31 இல் நிதி நிலமைக் கூற்று (புள்ளிகள் 8)

(மொத்தப் புள்ளிகள் 12)



Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk